## திருப்பூர் மாநகராட்சி சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ்

# ரூ.184.98 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப்பணிகள்!


## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் ஆய்வு!

திருப்பூர், ஆக. 31-

திருப்பூர் மாநகராட்சி சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் ரூ.184.98 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப்பணிகளை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், மாநகராட்சி மேயர், வடக்கு மாநகர கழக செயலாளர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர் ஆகியோர் முன்னிலையில் திருப்பூர் மாநகராட்சி, 60 வது வார்டு, பொன்கோவில் நகரில் ரூ.11.50 இலட்சம் மதிப்பீட்டில் கோயம்புத்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஆர்.நடராஜன் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் கட்டப்பட்ட புதிய நியாய விலைக் கட்டடத்தை திறந்து வைத்தும், வார்டு எண் 54 வீரபாண்டி பகுதி மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் ரூ.11.82 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட உள்அரங்கத்தை திறந்து வைத்து, நஞ்சப்பா மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் ரூ.2.61 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தினையும், வார்டு எண் 36, வெள்ளிவிழா பூங்கா அருகில் சீர்மிகு நகரத் திட்டத்தின் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் சுரங்கப் பாதை பணியினையும், நொய்யல் ஆற்றங்கரையில் ரூ.177.69 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மேம்பாட்டு பணியினையும், வார்டு எண்.35 யில் ரூ.4.68 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பூ மார்க்கெட் பணியினையும் என மொத்தம் ரூ.184.98 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு திட்டப்பணிகளை விரைவாக முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் அரசு துறை அலுவலர்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தி னார்.

இந்நிகழ்ச்சியில் மண்டலத் தலைவர்கள் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன், சி.கோவிந்தசாமி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன், மாநகராட்சி துணை மேயர் பாலசுப்பிரமணியம், திருப்பூர் மாநகராட்சி துணை ஆணையாளர் அ.சுல்தானா பர்வீன், உதவி ஆணையர் வினோத், தலைமை பொறியாளர் (பொ) செல்வ நாயகம், செயற்பொறியாளர் வாசுகுமார், மாவட்ட முன்னாள் பொருளாளர் ரத்தினசாமி, கருவம்பாளையம் பகுதி கழக செயலாளர் மியாமி ஆ.அய்யப்பன், மாநகர பொருளாளர், மாமன்ற உறுப்பினர் செந்தூர் ஜி.முத்து, கல்விக்குழு தலைவர் பெ.திவாகரன், பொதுசுகாதாரக்குழு தலைவர் கவிதா நேதாஜி கண்ணன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டத்தைச் சேர்ந்த அக்கரைப்பேட்டை, டாட்டா நகர், ஆரியநாட்டு தெரு, நம்பியார் நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 10 மீனவர்களை விசைப்படகுடன் இலங்கை கடற்படையினர் கைது செய்தனர். இதையடுத்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசுக்கு கொடுத்த அழுத்தத்தின் காரணமாக 10 மீனவர்களையும் உடனடியாக இலங்கை அரசு விடுவித்தது. இதையடுத்து இலங்கையில் இருந்து நாகை வந்த அந்த மீனவர்களை நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் சந்தித்து ஆறுதல் கூறி நலம் விசாரித்து கழகத்தின் சார்பில் நிதி உதவியளித்தார். உடன் மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் எஸ்.கே.ஜி.ஏ.சேகர், மாவட்ட தொழிலாளர் அணித் தலைவர் என்.மோகன்தாஸ், நகர்மன்ற உறுப்பினர் சுரேஷ் ஆகியோர் உள்ளனர்.





திருப்பூர் மாநகராட்சி, திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 45 வது வார்டு, நொய்யல் வீதி அரசு நடுநிலைப்பள்ளியில் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் விரிவாக்கம் செய்யப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர், வடக்கு மாநகரக் கழகச் செயலாளர் ந.தினேஷ்குமார் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இதில் திருப்பூர் தெற்கு மாநகரக் கழகச் செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.





